Registerd as a Newspaper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

லைர் 8 (28-4-66) இதழ் 80

பராபவ சித்திரை 15 முஹர்ரம் பிறை 6 வியாழக்கிழமை

சூடு பிடிக்கும்

பாக்குநீரிணை விவகாரம்

யாழ்ப்பாணம், வியா. பாக்குநீரிணையை உண்மையாக நீந்திக் கடந்தவர் யார் என்ற பிரச்னை இப்போது தோன்றியிருக்கிறது. இந்தியாவின் வங்காளத்தைச் சேர்ந்த மிகிர் சென், தாம்தான் இதைஉண்மையாக நீந்தியிருப்பதாயும், வேறு எவரும் அப்படிச் செய்யவில்லை என்றும் கூறியதை அடுத்து, இலங்கை நீச்சல் வீரர்கள் நவரத்தினசாமியும், ஆனந்தனும் இக்கூற்றை மறுத்துள்ளனர்.

நவரத்தினசாமியும், மிகிர்சென்னும் இக்கடலை நீந்தியபோது அவர்களுடன் சிறிதுதூரம் கூடச் சென்றதாகக் கூறும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு கடற்றொழிலாளியுடன் இதுசம்பந்தமாகப் பேசிய போது அவர், ஆனந்தனின் நீச்சல் குறித்து சந்தேகம் தெரிவித்ததுடன் சென்னைப் போன்ற நீச்சல்காரரை தமது வாழ்நாளிலேயே கண்டதில்லை எனக் கூறினார்.

மிகிர்சென்னின் நீச்சல் உத்திகள்தமக்குப்புதுமையாகத் தென்பட்டதென்றும், நீச்சலின் போது அவரது கைகள் கப்பலின் சக்கரத்தைப் போல் சுழல்வதாயும் நவரத்தினசாமியின் நீச்சலை தாம் அவதானித்ததாயும் அதில் சென்னின் வேகம் எதையும் தாம் காணவில்லை என்றும் கூறினார்.

மூன்று நீச்சல்வீரர்களையும், ஒரே சமயத்தில் ஒரே இடத்திலிருந்து மீண்டும் இந்த நீச்சலை ஆரம்பிக்கும்படி செய்தால் மிகிர் சென் தான் அதில் வெற்றிபெறக் கூடும் எனத்தாம் நம்புவதாயும் அவர் கூறினார். கடலில் நீண்ட அனுபவம் பெற்ற முத்துக்குளிப்புத் தொழிலாளியான மீரானின் கூற்று இது.

ரயில்வே பகுதி

பாதுகாப்பு சேவை சீரமைக்கயோசனை

அரசாங்கத்துக்கு மூவர்குழு செய்துள்ள சிபாரிசுகள்

கொழும்பு, புதன் ரயில்வே பகுதியின் பாதுகாப்பு சேவையை திருத்தி அமைப்பது பற்றி விசாரணை செய்த மூவர் அடங்கிய குழு தனது சிபாரிசுகள் அடங்கிய அறிக்கையை நேற்று அரசாங்கத்திடம் சமர்ப்பித்தது.

ரயில்கள் அனுப்பப்படும் பொருட்களும் பொதுமக்களுக்குச் சொந்தமான சாமான்களும பெருவாரியாகக் களவு போவதைத் தடுப்பதற்கு ரயில்வே பாதுகாப்பு சேவையைத் திருத்தி அமைப்பது அவசியம் என்று குழு சிபாரிசு செய்திருக்கின்றது.

பாதுகாப்பு சேவைகளுக்கு அதிக அதிகாரங்கள் அளிப்பது, புதியவர்களை சேவைக்கு அமர்த்துவது, சம்பளம் நிர்ணயிப்பது போன்ற அம்சங்கள் குறித்தும் குழு சிபார்சுகள் சமர்ப்பித்துள்ளது. ரயில் பாதுகாப்புசேவையை இந்திய ரயில் பாதுகாப்புச் சேவையின் அடிப்படையில் சீரமைக்கவேண்டும் என்றும் குழு அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

இக்குழுவிற்கு இந்திய ரயில்வே பாதுகாப்புசேவை இன்ஸ்பெக்டர் திரு. ஆகார் தலைமை வகித்தார்.

ரயில் பாதுகாப்பு சேவை ஒரேஇடத்திலிருந்து இயங்காமல் வட்டாரங்கள் தோறும் கிளைகள் நிறுவப்படவேண்டுமென்றும், அதன் அதிகாரங்கள் வட்டாரங்கள் வாரியாக பிரிக்கப்படுவது நல்லபலனளிக்கும் என்றும் சிபாரிசு தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது.

சத்திரசிகிச்சைக்கு மேசைக் காற்றாடி!

யாழ்ப்பாணம், வியா. யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியின் சத்திர சிகிச்சை நிலையத்திலுள்ளகுளிர்சாதன இயந்திரம் கடந்த மூன்று மாதங்களாக இயங்காததன் காரணமாக நோயாளர்களுக்கு சத்திர சிகிச்சை செய்யும் டாக்டர்களும் மற்றும் ஆஸ்பத்திரி பணியாளரும் மேசையில் இயங்கும் காற்றாடிகளையும் வேறு வழிவகைகளையும் சத்திர சிகிச்சைசெய்யும்சமயங்களில் உபயோகிக்கின்றனராம்.

இக்குளிர் சாதன இயந்திரத்தைத்திருத்துவதற்கு பல மாதகாலம் எடுக்கலாமெனவும், கொழும்புக் காரியாலயத்திலிருந்தே ஆட்கள் வரவேண்டுமெனவும் தெரியவருகிறது.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியிலுள்ள நாலு 'ஸ்டெரலைசர்'களில் மூன்று வேலைசெய்யமுடியாதநிலையிலும் ஒன்றுமட்டுமே தற்பொழுது இயங்கிவருவதாகவும் கூறப்படுகிறது. தினமும் சத்திரசிகிச்சை நடைபெறும் வடமாகாணத்தின் பிரதானமான இவ் ஆஸ்பத்திரியில் இக்குறைபாடுகளினால் நோயாளிகள் கஷ்டமும் சத்திரசிகிச்சையில் தாமதமும் ஏற்பட்டுவருகிறதெனப்பொது மக்கள் அதிகாரிகளுக்கு புகார்செய்துள்ளனர்.

தற்பொழுது ஆஸ்பத்திரியிலிருந்து சிகிச்சைபெறும் நோயாளருக்கே மருந்து வகைகள் கொடுக்கப்படுகிறதாம். வெளிநோயாளர் பகுதியில் சிகிச்சை பெறும் நோயார்கள் தொடர்ந்தும் டாக்டர்கள் மருந்தை சிபார்சு செய்தயின்னர்தனியார் மருந்துச்சாலைகளிலேயே வாங்கிவருகின்றராம்

நான்கு பிள்ளைகளின் தந்தை 'உத்தரதேவி'க்குப் பலி!

யாழ்ப்பாணம், வியா. நான்கு பிள்ளைகளுக்குத் தகப்பனான நாற்பது வயது முத்துச்சாமி காசிப்பிள்ளை என்பவர் கொழும்பிலிருந்து வந்த 'உத்தரதேவி' ரயிலில் நெரியுண்டு மரணமடைந்த பரிதாபகரமான சம்பவம் அரியாலையில் இடம்பெற்றுள்ளது.

யாழ். நகர மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கணகரத்தினம் நடாத்திய மரணவிசாரணையொன்றின் போதே மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

என்ஜின் டிரைவர் திரு ஏ. ஆர். எல். சொக்மான் சாட்சியமளிக்கையில், இரவு 243-ம் கட்டையில் ரயில்வந்துகொண்டிருந்த போது இருவர் ரயில் எதிராக ஓடிவந்து ரயிலை நிறுத்தும்படி கத்தினார்களென்றும், ஆனால் ரயிலை குறிப்பிட்ட இடத்தில் நிறுத்த முடியவில்லையென்றும், தண்டவாளம் போகும் றோட்டில் படுத்திருந்த நபர் ரயிலுக்குள் நெரியுண்டார் என்றும் தெரிவித்தார்.

காலஞ்சென்றவரின் மனைவி இந்திராணி சாட்சியமளிக்கையில், இறந்தவர் தமது கணவரென்றும், பத்து வருடமாக இருவரும் ஒன்றாகவே வாழ்க்கை நடாத்திவருவதாகவும், தமக்கு நான்கு குழந்தைகள் இருக்கின்றனரென்றும், தனது கணவனின் பிறப்பிடம் இந்தியா என்றும் சொன்னார். சம்பவம் நடப்பதற்கு முதல்நாள் பனை சீவுவதற்காக போனவர் திரும்பிவரவில்லையென்றும், அவர் ரயிலில் நெரியுண்டதுபற்றி அறிவிக்கப்பட்ட பிறகுதான் அதுபற்றித் தெரியுமென்றும், இந்த மரணத்தில் எவ்விதமான சந்தேகமுமில்லையென்றும் இந்திராணி கூறினார்.

பிரேதபரிசோதனையில் இறந்தவரின் வயிற்றுக்குள் நிறையக் கள்ளு காணப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

'முதல் எதிரி துப்பாக்கியால் சுட்டார்'

நாவலர் சந்தி கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம். புதன் நாவலர் சந்தி கொலைவழக்கு நேற்று யாழ்ப்பாண மாஜிஸ்டிரேட் திரு. ரி. ஜே இராசரத்தினம் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மகேந்திரன் பற்றறி சேவிஸ் மனேஜரான மகேஸ்வரசர்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

8-11-65 பிற்பகல் 3-30 மணிக்குமுதலாளியின்நண்பரும்காலஞ்சென்றவரின்நண்பருமான குலசிங்கம் கடைக்கு வந்திருந்தார். 5 மணியளவில் குலசிங்கமும் காலஞ்சென்றவரும் எமது கடைவாசல் படியில் உட்கார்ந்திருந்தனர். 5-30 மணியளவில் நான் கடைக்குள் சென்றேன் சென்றபின் காலஞ்சென்றவர் ஒரு கோப்பை தேநீர் கொண்டுவந்து குலசிங்கத்திற்கு கொடுப்பதைக் கண்டேன். பின் காங்கேசன்துறை விதிவழியாக சி. எல் 4424 நம்பருடைய கார் வந்ததைக்கண்டேன். அதில் இருவர் வந்தனர். அதில் ஒருவர் சாரதி மற்றவர் முன்றாவது எதிரி சண்முகம் பின் சுமார் 10 நிமிடங்களின்பின் அதே கார் மீண்டும் அதே வழியாக வந்தது அப்பொழுது முதலாவது எதிரி காரின் பின் ஆசனத்தில் அமர்ந்திருந்தார் அவர் துப்பாக்கியால் குலசிங்கம் இருந்தபக்கமாகசுட்டார். சண்முகம் இரத்தினத்திற்கு பக்கத்தில் இருந்தார். சுட்டதும் காலஞ்சென்றவர் ஒருபக்கத்தில் விழுந்தார். நான் எனது முதலாளிக்கு ஒரு பையன் மூலம் அறிவித்தேன் அதன்பின் பொலிஸாருக்கு வாக்குமூலமளித்தேன். இவர் சாட்சியமளித்தபின் வழக்கு அடுத்த மாதம் 8-ந் திக்திக்கு ஒத்திப்போடப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சகாயம், கே. வி. எஸ். சண்முகநாதன், திரு தளையசிங்கம். யோகநாதனின் அனுசரணையுடன் வழக்கை நடத்தினார்கள். திரு. ரி. கணேசலிங்கம், செல்லத்துரை, ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் எதிரி தரப்பில் ஆஜரானார்கள். (ந. நி.)

தபால்தந்தி மந்திரி மே 7-ல் யாழ்ப்பாணம் வருகிறார்!

யாழ்ப்பாணம், வியா. தேசியஅரசாங்கத்தின் தபால், தந்தி மந்திரி திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா இம்மாதம் 7-ம் திகதி யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கிறார். இங்கு 11-ம் திகதிவரை தங்கி மந்திரி பல பகுதிகளுக்கும் விஜயம்செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. மந்திரியின்உத்தியேகபூர்வமான இவ்விஜயத்திற்கான நிகழ்ச்சிநிரல் நாளை அரசாங்க அதிபர் தலைமையில் கூடும் மகாநாட்டில் முடிவு செய்யப்படும்.

ஆசிரியர்களின் இடமாற்றம்

யாழ்ப்பாணம், வியா. வெளி மாகாணங்களில் கடமையாற்றும் அறுபது ஆசிரியர்கள் ஜூன் முதலாம் திகதியிலிருந்து வடபகுதிக்கு இடமாற்றம் செய்யப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வெளியிடங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களே வடபகுதிக்கு இடமாற்றம் செய்யப்படுவார்களென அறியப்படுகிறது.

வித்தியாதிபதிபகுதியினரின் மேலதிகாரியொருவரைப் பேட்டிகண்ட அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுக் காரியதரிசி திரு. சி. செல்வத்துரை மேற்படி தகவலைத் தெரிவித்தார்.

வெளிமாகாணங்களில் நீண்டகாலமாக இருந்து வரும் ஆசிரியர்களின் இடமாற்ற விஷயமாக அரசினர் தமிழ் ஆசிரியர் சங்கம் பல முறைகளில் முயற்சி மேற்கொண்டிருந்தது.

1-5-66-ல் வடபகுதிக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கும் வெளிமாகாண ஆசிரியர்களுக்கு இடமாற்றக் கட்டளைகள் வடபெரும்பாக வித்தியாதிபதியால் இவ்வார இறுதியில் அனுப்பி வைக்கப்படுமென அறியப்படுகிறது. (ந. நி.)

போன்: 7168

C. W. E.

புடவைகளும்

கண்ணைக்கவரும் வர்ணங்களில்

லேடி ஹமில்டன் கிறேப் சில்க் சாறீஸ்

பிஜாமா சாரம்

901 ஜப்பான் மல் வேஷ்டிகளும்

கூப்பனுக்கு பெற்றுக்கொள்ளலாம்

"ராஜ்கோபால்ஸ்"

36/1, பெரியகடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மனது சாந்தம் குறையாமல் இருந்தால் எப்பொழுதும் ஆனந்தம தான் மற்ற சம்சாரத்தால் துன்பம்தான் உண்டாகிறது. திருஷ்டியைக் குறைத்துக்கொள். கூட்டத்தில் சேராதே. இந்திரிய வியாபாரங்களைக் குறைத்துக்கொள் என்று சொல்லுவது அதற்காகத்தான்.

—ஸ்ரீசங்கராச்சாரி சுவாமிகள்

ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 40, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 319

சுத்திரை மீ வ 15 (28-4-66)

மூன்று அரசுகளின் ஒத்துழைப்பு

கோலாலம்பூர் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொண்ட ஐரோப்பிய அறிஞர்கள், கொழும்பு சரஸ்வதிமண்டபக்கூட்டத்தில் தமிழைப்பற்றி புகழ்ந்து கூறிஅஞ்சலி செலுத்தியுள்ளது, தமிழராகிய நமக்கு மிக ஆறுதலும் பெருமையுமளிப்பதாகும்.

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று ஸ்வீடன் நாட்டைச்சேர்ந்த பேராசிரியர் திரைகோம் தமது பேச்சைத் தமிழிலே ஆரம்பித்து, திருக்குறளை ஸ்வீடிஷ் மொழியில் பெயர்த்து வருவதாயும், தமிழின் சிறப்பு இப்போதுஉலகின் பல பாகங்களிலும் பரவி வருகிறதென்றும் தமிழை வளர்க்கத் தமிழர்கள் மேலும் முயற்சிக்கவேண்டுமென்றும், தமிழுக்காக வாழவேண்டுமென்றும் உணர்ச்சியுடன் கூறியுள்ளார். கோலாலம்பூர் மகாநாடு தமிழர் செய்யும் ஏதோ வகுப்புவாத சதி என்று கருத்துப்பட நமது பார்லிமெண்டிலே பேசிய தம்பதெனியா மெம்பருக்கு ஸ்வீடிஷ் அறிஞர் கூறியது அர்ப்பணமாகும். தமிழின் பெருமையை திரு. ஆர். ஜி. சேனநாயகாவுக்கும் அறிவுறுத்துவதாயின், அவர் இனி அப்படியெல்லாம் பிதற்றத் துணியார்.

ஈழம், தமிழகம், மலேயா இம்மூன்றுநாட்டு அரசுகளும் சேர்ந்து தமிழ்ப்பணி புரிவதில் ஒத்துழைத்தது, சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவை. இந்த ஒத்துழைப்பு இனிபலப்பட்டு விரிவடையச் செய்ய வேண்டியது அவசியம். கிழக்கு ஆசியாவைச்சேர்ந்த இம் மூன்று அரசுகளின் தமிழ் அமைச்சர்களும், இம் மகாநாட்டில் முதல் தடவையாகப்பேச முடிந்தது பெரியகாரியம். இம்மூன்று நாடுகளுக்கும் தமிழ்மொழி இணைப்பு மொழியாக இருப்பது விசேஷம். தமிழ் மூலம் சிறப்பாக இம் மூன்று நாடுகளுக்கும் நல்லுறவைப் பலப்படுத்தவும், தப்பெண்ணங்களை நீக்கி, பொருளாதாரம், கல்வி முதலிய பல்வேறுதுறைகளிலும் பயனுள்ளமுறையில் இம்மூன்று நாட்டு அரசுகளும் தொடர்ந்து ஒத்துழைக்க முடியுமாயின், அதனால் தமிழ்கூறும் நல்லுலகுக்குமட்டுமன்றி, பொதுவாக உலகமனைத்துக்கும் பல நன்மைகள் ஏற்படலாம்.

தமிழிலுள்ள செல்வங்கள் தமிழரிலேயே பலருக்குத் தெரியாது. மற்றவர்கள் விஷயத்தைப் பற்றி கூறத்தேவையில்லை. தமிழிலுள்ள அரும் செல்வம், தமிழருக்கு மட்டுமன்றி உலகமனைத்துக்கும் பொதுச் செல்வம். கோலாலம்பூர் மகாநாட்டிலே பல தேச அறிஞர்களும்சமர்ப்பித்த ஆராய்ச்சிக் கட்டுரைகள், தமிழிலுள்ள அருஞ்செல்வங்களை தமிழருள்ளிட்டு உலக அறிஞர்களுக்கு உணர்த்த ஓரளவு உதவுவதாகும். இனி தமிழ் இலக்கியச் செல்வங்கள், பல உலக மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு பலருக்கும் அதிகமாகப் பயன்படச் செய்ய வேண்டும். இதற்கான வகையில் தமிழர் மட்டுமன்றி, ஈழ, தமிழக, மலேயா அரசுகள் தொடர்ந்து ஒத்துழைத்துப் பணியாற்றுவதே தமிழ்மூலம் உலகத்துக்குச் செய்யக்கூடிய மேலான நன்மையாகும்.

விவசாயிகள் சங்கடம்

கிளிநொச்சிப் பகுதியிலே விளைந்த நெல்லை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் விற்பதிலும் பணம் பெறுவதிலும் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுவதாக ஒரு விவசாய அன்பர் எழுதுகிறார். முன்னெரெல்லாம் நெல்லை உடனுக்குடன் வாங்கிப் பணத்தைக் காசோலை மூலம் கொடுத்து வந்ததாகவும், ஆனால் இப்போது 'கோட்டா' முறையில் தான் நெல் வாங்குவதாகவும், விளைந்த நெல்லைச் சேமித்து வைக்கவும் விவசாயிகளுக்குத் தக்க இடமில்லை எனறும், வயலிலுள்ள நெல் மூடைகள் மழையில் நனைவதாகவும், இதனால் விவசாயிகள் குறைந்த விலைக்கும் சிலருக்கு நெல்லை விற்று நஷ்டமடைய வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றார் நெல் உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு ஊக்கமும் உதவியும் அளிக்க அரசாங்கம் பெருந்தொகை செலவழிக்கின்றது. ஆனால் இதை நம்பி விவசாயகள் உற்பத்தி செய்த நெல்லை உடனுக்குடன் வாங்க அரசாங்கம் ஒழுங்கு செய்யாவிடில் கஷ்டநஷ்டமடைந்த விவசாயிகள், நெல் உற்பத்தியையே கைவிட்டு விடக்கூடும். உதவி அளிப்பதாகக் கூறிவிட்டு, எக்காரணம்பற்றியும் அவர்களை ஏமாற்றுவது நியாயமாகாது. இவ்விஷயத்தில் எம். பி. மார்கள் அரசாங்கத்துக்கு எடுத்துச் சொல்லி நாட்டுக்குப் பெரும் பணி செய்யும் விவசாயிகளின் சங்கடங்களைத் தீர்க்க எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

மேதினம்பற்றி என். எம்., பீட்டர்

மேதினக் கொண்டாட்டங்கள் ஒருவித சம்பவமுமில்லாது நல்ல சூழ்நிலையில் தாம் நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக டாக்டர் என். எம். பெரேராவும் பொலிஸ் அதிபருக்கு அறிவித்துள்ளனர். திரு. பீட்டர் கெனமனும்

சம்பள உயர்வுக்காக அயராது போராடவேண்டும்

தராதரப்பத்திர ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் முழக்கம்

யாழ்ப்பாணம், வியா.

"கடந்த இருவருடங்களாக நமது சங்க அங்கத்தினர்கள் சலித்துப்போய் இருந்தனர். ஆனால் இப்போது தேசியஅரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து ஒரு புதிய உற்சாகம் பிறந்திருக்கிறது. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் சென்று கல்விமந்திரியிடம் நமது குறைகளைத் தெரிவித்து, இம்முறையாவது வெற்றியடைய முயற்சிக்க வேண்டும்."

ஆனைப்பந்தி உயர்கலை மன்ற மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்தராதரப்பத்திர ஆசிரியர்சங்கக்கூட்டத்தில் திரு. ஆர். சோமசுந்தரம் தமது தலைமையுரையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், நமது சம்பள உயர்வுக்காக அயராது போராடவேண்டுமென்றும் எப்படியாவது அரசாங்கத்துடன் வாதிட்டாவது எமது சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கூறினார்.

ஆசிரியர் எஸ். இராமலிங்கம் பேசுகையில், எமக்கு அளிக்கப்பட்ட அநீதியை நிவர்த்திசெய்ய எம்மாலான முயற்சிகள் அனைத்தையும் செய்யப் பின்னிற்கக் கூடாதென்று கூறினார்.

தம்மை சாதாரண 'தராதரப் பத்திர ஆசிரியர்கள்' என்பதால் பெண்கள் ஒரு சிறிதுகூட மதிப்பில்லையென்றும் அவர் மேலும் கவலை தெரிவித்தார்.

அகில இலங்கை தேசிய தொழிற்சங்க சம்மேளனத்துக்கு தமது பிரதிநிதிகளாக திருவாளர்கள் எஸ். சிவசம்பு, எஸ், சோமசுந்தரம், எம். குமாரவேலு ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

சம்பளஉயர்வு குறித்து கல்விமந்திரியுடன் பேட்டி காண்பதற்கு ஏழு பேர் கொண்டகுழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. (ந. நி)

"ஒவ்வொரு பாடசாலையிலும் இசையாசிரியர் நியமிக்சப்படவேண்டும்'

யாழ்ப்பாணம், வியா.

"இந்தநாட்டில் இசை பிரதானஇடம் வகிப்பதால்அவசியம் ஒவ்வொரு பாடசாலையிலும்இசையாசிரியர் இருத்தல் அவசியம். இசையாசிரியர் சங்கமும் வித்தியாதரிசினியும் மூயன்று இசையாசிரியர்களைநியமிக்க ஆவன செய்யவேண்டும்" என்று வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். இசையாசிரியர் புத்தூக்க வகுப்புக்குத் தலைமைதாங்கிப் பேசிய வட்டார வித்தியாதரிசி திரு. என். ஆர். பாலசிங்கம் கூறினார்.

"தமிழிசை" என்ற தலைப்பில் வித்துவான் திரு. க. கி. நடராஜன் பேசுகையில், "இசை தனித் தன்மையது. ஓவியம். காவியம், சிற்பம் என்னுமிடத்து இசைவயப்பட்டு எல்லோரும் இசையை முதற்கண் அனுபவிக்க முடியும் என்பதைக் காணமுடிகிறது. தேவார திருவாசகங்களும்—திருப்புகழ் போன்றவையும் பக்தியுடன் கலந்த இசைப்பாட்டுக்கள். சமய குரவர்களும். ஆழ்வாராதிகளும் தமிழோடிசைபாடி இறையருள் பெற்றவர்கள்—மனிதர்கள்மட்டுமல்ல தாவரங்களும் இசைவயப்பட்டன என்பதை வண்டு ரீங்காரம் சேய்வது கேட்டு மலரே மலர்ந்தது என்ற புறநானூற்றுச் செய்யுள் மூலம் அறியலாம். தாலாட்டில் குழந்தை தூங்குவதையும், மகுடிஇசையில் மயங்கி நச்சுமிகும் நாகம் ஆடுவதும், இசைகேட்டு மலர் மலர்தும், இசையின் சிறப்புக்கு சான்றுபகரும். அனுயநாயனார் புராணத்தில் அவரின் வேய்ங்குழல் இசைகேட்டு, பகைமிருகங்கள் பகை மறந்து ஒன்றுநின்று இசையில் மயங்கிய வரலாற்றைக் காணலாம்" என்றார்.

"கானல்வரி" என்றதலைப்பில் திரு. சொக்கலிங்கம் பேசுகையில் "இசையுங் கூத்துமே உயிராய் வாழ்ந்தவள் மாதவி. அவ்விரண்டு கலைகளையும் நன்குணர்ந்து, சுவைக்கும் சுவைஞகஉயர்ந்தவன் கோவலன். கலையினால் இணைந்த இந்த இருவரும் கலையினாலேயே பிரியும் அவலத்தை எடுத்தியம்புததே கானல்வரி சொல்லும் சொல்கனிந்த பொருளும் இவையிரண்டும் பின்னிப் பிணையும் இசையும் ஒன்று சேரும்போது எவ்வகைப் பேருண்மையையும் வெளிப்படுத்திவிடலாம் என்ற உண்மையினைக் கானல்வரி எமக்கு எடுத்துக் காட்டுகிறது" என்று கூறினார். 'சுருதிபேதம்' பற்றி திரு. எஸ். வேலாயுதபிள்ளையும் பேசினார்கள்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

தாயும், மாணவ மாணவிகளிடையே கூடாத உறவு ஏற்பட்டு, விபரீதம் விளைவதாகவும் அச்செய்தி கூறுகிறது. மேற்கத்தி நாடுகளில் இது சர்வ சகஜமாகிவிட்டதாகக் கேள்விப்படுகிறோம்.

உயர்தரக்கல்வி கற்று நம் மாணவ மாணவிகள் வாழ்க்கையிலே சிறந்து விளங்குவதற்காக பெற்றோர்கள் பெரும் சிரமப்பட்டு அனுப்புகிறார்கள். வாலிப வயதிலே மனதைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல், அவர்கள் வாழ்கையையே குட்டிச்சுவராக்கிக் கொள்வதாயின், இந்தப்படிப்பே எதற்கு என்று தோன்றுகிறது.

அவர்களை இந்த ஆபத்திலிருந்து காக்கவும், "திருகலாகிய சிந்தையைத் திருத்தவும்" கோவிலும் வழிபாடும் அதிக அவசியமாகிறது. ஆகவே மாணவர்களே இதை உணர்ந்து, கோவில் கட்டமுன்வந்திருக்கையில், பெரியவர்கள் இதற்கு எல்லா ஆதரவு மளித்து, நமது செல்வங்களாகிய மாணவ மாணவிகளைப் பாதுகாக்கவேண்டாமா?

∴ ∴ ∴

தம்மையே புகழ்ந்திச்சை
பேசினும்சார்கினும் தொண்
டத் தருகிலா,
பொய்மையாளரைப் பாடதே
எந்தை புகலூர் பாடு
மின் புலவீர்காள்,
இம்மையே தரும் சோறும்
கூறையும் ஏத்தலும் இடர்
கெடலுமாம்,
அம்மையே சிவலோகம் ஆள்
வதற்கியாதுமையுறவில்
லையே.

—சுந்தரமூர்த்தி
சுவாமிகள்

ஐயாறன் எழுதுகிறது

காலையிலே பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓர் இந்து மாணவர் வந்தார் அங்கு பல சமயத்தவருக்கும் வழிபடு ஸ்தலங்கள் இருக்கையில் சைவர்களுக்கு மட்டும் கோவில் இல்லை என்றும், பக்கத்திலுள்ள ஒரு குன்றின் மீது ஒதுக்கியுள்ள இடத்தை சிரமதான மூலம் சைவ மாணவர்களே கோவில் கட்ட துப்புரவாக்கியுள்ளதாயும் தெரிவித்தார்.

அங்கு இந்துக் கோவில் கட்டும் முயற்சி பல்லாண்டுகளாகத் தடைப்பட்டுள்ளது. இந்து மாணவர் சங்கத்தார், தங்கள் சஞ்சிகையில் இதைப்பற்றிக் கதறிக் கதறி தலையங்கங்கள் எழுதினர். தாங்கள் வழிபட ஒரு கோவில் அவசியம் தேவை என்று வற்புறுத்தினர். என்றாலும் "இந்துப் பெரியவர்கள்" மனம் இரங்கியதாகத்தெரியவில்லை.

இப்போது மாணவர்களே சிரமதானமூலம், அந்த இடத்தில் காட்டை அழித்து சுத்தம் செய்துள்ளதாயும், சீக்கிரத்தில் கோவில் கட்ட அஸ்திவாரம் போடவேண்டுமென்றும் இல்லாவிட்டால் மீண்டும் அந்த இடத்தில் காடு மண்டிவிடுமென்றும் அந்த மாணவர் தெரிவித்தார். இதற்காக யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் உதவி நிதிக்காக சில சினிமாப்படங்களைக் காட்ட ஏற்பாடு செய்துள்ளதாயும், பொதுமக்கள் இதற்குத் தாராளமாக உதவிசெய்ய, 'ஈழநாடு' மூலம் விளம்பரம் செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இவ்விஷயம்பற்றி 'ஈழநாடு' ஏற்கெனவே பன்முறையும் வற்புறுத்தி வந்துள்ளது. இப்போது இந்து மாணவர்கள் செய்யும் இந்த நல்ல முயற்சியைப் பாராட்டுவதுடன், இதற்குப் பொதுமக்கள் கூடிய உதவி அளித்து ஆதரிக்க முன்வருவரென்பதில் ஐயமில்லை.

கோவில்கட்ட ஆரம்பித்ததும், ஏற்கனவே இதற்காக ஒரு தமிழ்த்தாய் அளித்துள்ள நன்கொடைப்பணமும் கிடைக்கலாமென்று தெரிகிறது. அச்சர்வகலாசாலையில் மொத்தம் 6000 மாணவரில் 1200 பேர் இந்துக்களாம். அவர்களுக்கு எதிர்காலத்தில் அங்கு இடமில்லாமல் போகலாமென்று ஐயுற்றே அங்கு கோவல்கட்ட "பெரியவர்கள்" தயங்கி மௌனம் சாதிப்பதாக ஒரன்பர் மூலம் அறிந்தேன். இது உண்மையாயின் இதைவிடப் பெரிய தீங்கு இருக்கமுடியாது. கண்டிப்பகுதியிலே சுமார் 10 லட்சம் இந்துக்கள் வசிப்பதை யாரும் மறப்பதற்கில்லை. மற்ற சமயங்களுக்கெல்லாம் வழிபடு ஸ்தலங்கள் இருக்கையில், இரண்டாவது பெரிய சமூகமான இந்துக்களுக்கு மட்டும் இல்லாமலிருப்பது பெரிய குறை மட்டுமல்ல, இங்குள்ள இந்து சமூகத்துக்கே பெரிய அவமானமுமாகும். இதைத் தீர்க்க, இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு இந்துவும் ஆர்வத்துடன் முன்வரவேண்டும்.

∴ ∴ ∴

நேற்று ஓர் ஆங்கிலப் பத்திரிகையிலே பேராதனையைப்பற்றி ஒரு செய்தி, முன் பக்கத்தில் கொட்டை எழுத்தில் போட்டிருந்ததைப் பார்த்தேன். சர்வகலாசாலையில், ஒழுக்கக் கேடுகள் அதிகரித்துள்ள

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திவாய்ந்த ரஷ்யரக 'மிக் 21' விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது!

வடவியட்னும் உயரே அமெரிக்க-மிக் வானச்சண்டை

அமெரிக்கா இருவிமானங்களை இழந்ததாக அறிவிப்பு

ஹானேய், ஏப். 27

வடவியட்னுமில் ஹானேயிலிருந்து 104 கிலோமீட்டர் வடகிழக்கே, ரஷ்ய ரக மிக் 21 சூபர்ஸோனிக் விமானம் ஒன்றை அமெரிக்கா சுட்டுவீழ்த்தியதாக அறிவிக்கப்பட்டது. ரஷ்யாவின் அதிசக்தி வாய்ந்த 'மிக் 21' சுட்டு வீழ்த்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

வானத்திலிருந்து வானத்துக்கு செலுத்தப்படும் ராக்கெட்டுகளினால் இது வீழ்த்தப்பட்டது.

இரு அமெரிக்க ஜெட் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாய், வடவியட்னும் கூறியது. நேற்று அமெரிக்க பெண்டம் ஜெட்டுகளுக்கும், ரஷ்ய மிக் சூபர்ஸோனிக் விமானங்களுக்குமிடையே நடைபெற்ற சண்டையின்போது இச்சம்பவங்கள் இடம்பெற்றன.

சுட்டுவீழ்த்தப்பட்ட 'ரஷ்ய ரக மிக் 21' சீனத் தளத்திலிருந்து வந்ததா என்பது ஊர்ஜிதமாகவில்லை என அமெரிக்க ராஜாங்கஇலாகா அறிவித்தது

நேற்று தென்வியட்னும் தலைநகர் சைகோனில் வியட்காங்கியர் வெடிகுண்டு வீசியது காரணமாக 9 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 20 பேர் காயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

வியட்னும் சம்பந்தமாக நேற்று லண்டனில் பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி ஸ்டூவர்ட்டுடன் ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் பேசினார். வியட்னும் தீர்வுக்கு முன்னேற்றவாய்ப்பு இல்லை என அப்போது ஒப்புக் கொள்ளப்பட்டது. எனினும் அமைதிப்பேச்சுக்கு முயற்சி செய்யப்போவதாய் யுதாண்ட் கூறினார்.

இந்தோனேஷியாவில் ரஷ்ய சீன எதிர்ப்புக்கள்

ஜாகர்த்தா. ஏப்.29

ஜாகர்த்தாவில் ரஷ்ய தூதரகம் நடத்திய லெனின்கண்காட்சியை மூடும்படி மாணவர்கள்செய்துவிட்டார்கள்.

பொருட்காட்சி வாசலில் 50 மாணவர்கள்கூடி, மக்கள் உள்ளே செல்லமுடியாதபடி அவர்களைத் தடைசெய்தார்கள். இதைத்தொடர்ந்து அருகிலிருந்தரஷ்யதூதரகத்தின் ஓரமாக துருப்புக்கள் நிறுத்தப்பட்டன.

இதற்கிடையில் சுரபாஸாவிலுள்ள சீனத்தூதரகத்தை அங்குள்ள சீனர்கள் அமைதியாகக் கைப்பற்றினார்கள். தூதராலய அதிகாரிகள்ஆர்ப்பாட்டக்காரர்கள்வசம்ஒப்படைத்த, தூதரக திறப்புக்கள பின்பு அரசாங்க அதிகாரிகள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

வட கெலிபிஸில் எல்லா சீனம்பாடசாலைகளும் கைப்பற்றப்பட்டு, அரசாங்கத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டன.

தென்கெலிபிஸிலுள்ள இஸ்லாமிய ஸ்தாபனம், சீனவுடனான சகல உறவுகளையும் துண்டித்துக்கொள்ளும்படி அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

ஐ. நா. வுக்கு கானா புகார்

ஆக்ரா, ஏப். 27

வீழ்த்தப்பட்ட டாக்டர் நிக்ருமாவுக்கு ஆதரவாகவும், தற்போதைய கானா ஆட்சிக்கு விரோதமாகவும் கினி கெடுபிடி நடத்திவருவதாய் பாதுகாப்புசபைக்கு புகார்செய்யப்பட்டிருக்கிறது.

டாக்டர் நிக்ருமாவுக்கு அடைக்கலம் அளிக்கப்பட்டது குறித்து தங்களுக்கு ஆட்சேபனை எதுவுமில்லை என்றும், ஆனால் அங்கு கானாவுக்கு விரோதமான நடவடிக்கையைஅனுமதிக்க முடியாது என்றும் கானா கூறியிருக்கிறது.

மியூனிச்சில் ஒலிம்பிக் 1972

ரோம், ஏப். 27

1972-ம் ஆண்டு கோடைக்கால ஒலிம்பிக் விளையாட்டுகளை ஜெர்மனியிலுள்ள மியூனிக் நகரில் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

30 ஆண்டுகளுக்கு முன் 1936-ம் ஆண்டு ஹிட்லர் ஆட்சியின்போது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் முன்பு ஒரு தடவை நடைபெற்றது.

கென்யாவில் தேர்தல்

கென்யாவில் விரைவில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி கென்யாட்டா அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில் உபஜனாதிபதி பதவியிலிருந்து ராஜினாமாச் செய்த திரு. ஒகிங்கா ஒடிங்கா 'கென்யா மக்கள் யூனியன் கட்சி' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றை நிறுவியிருக்கிறார்.

பதேசிங் ஆட்சேபனை

புதுடில்லி, ஏப். 27

பஞ்சாப்பிரிவினைக்கு 1961-ம் ஆண்டு ஜனசங்கி அடிப்படையாகக்கொள்ளப்படும் என்ற அரசாங்கத்தின் முடிவை சந்த்பதேசிங்கின் அகாலிக் கட்சி எதிர்த்திருக்கிறது. இது சம்பந்தமாக எல்லைக்கமிஷன் முன் ஆட்சேபனை தெரிவிப்பதென அது தீர்மானித்திருக்கிறது.

மூளாயில் பட்டுநூல் நிலையம்

சுழிபுரம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் முதல் முறையாக தனியார் முயற்சியினால் ஓர் பட்டு நூல் நிலையம் மூளாயில் நிறுவப்பட்டிருக்கின்றது. இந்நிலையம் அமைக்கப்படும் வேலைகளை மூளாயைச் சேர்ந்த திரு. வி. ஆறுமுகம். கவனித்து வருகின்றார்.

துணியின் ஆயுள் நீடிக்க ...

புதுடில்லி, ஏப் 27

பருத்தித்துணியின் ஆயுளை நீடிக்கும் புதிய முறை ஒன்றை இந்திய விஞ்ஞானி டாக்டர் சிபால் காட்டி கண்டுபிடித்திருக்கிறார். உலகிலேயே இக்கண்டுபிடிப்பு தான் முதல் தடவையென அறிவிக்கப்பட்டது.

துணி தேய்ந்துபோகாமல் இருக்கும் ஆற்றல் இதற்கு உண்டு என்றும், நூலுக்கு ரசாயன முறையில் ஒரு வழவழப்புத் தன்மையை ஏற்படுத்துவது இந்த முறையில் ஒரு அம்சம் என்றும் கூறப்படுகிறது.

மீண்டும் ஊடுருவல்

கல்கத்தா, ஏப். 27

கடந்த திங்கட்கிழமைகிழக்கு பாகிஸ்தான் துப்பாக்கிப்படையினர் மேற்கு வங்க எல்லைக்குள் புகுந்து, உல்லாசப்பிரயாணி ஒருவரைக் கடத்திச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

கூச் பீகாரிலுள்ள தஹாகிராமில் இந்தியத் தொழிலாளர்களை அவர்கள் பயமுறுத்தியதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

இதுசம்பந்தமாக மேற்கு வங்கம். கிழக்கு பாகிஸ்தானுக்கு ஆட்சேபனை தெரிவித்துருக்கிறது.

பாப்பரசர்-குரோமிகோ சந்திப்பு

வத்திக்கான், ஏப். 27

ரஷ்ய வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோ இன்று பாப்பரசரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசினார். முக்கிய ரஷ்யத் தலைவர் ஒருவர் பாப்பரசரைத் சந்திப்பது இதுவே முதல்தடவை.

தன்ஸானியா

தாருல்இஸ்லாம், ஏப். 27

தன்ஸானியாவில் எல்லா இளைஞர்களுக்கும் 6 மாத கட்டாய ராணுவப்பயிற்சி அளிக்கப்படும் என ஜனாதிபதி நியர்ரே அறிவித்தார்.

மாபெரும் தீக்கோளம்!

வாஷிங்டன், ஏப். 27

அமெரிக்காவின் வடகிழக்கு ராஜ்யங்களில் வானத்தில் நேற்று பிரகாசமான தீக்கோளம் ஒன்று காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. நாம் பார்க்கும் பெரிய நட்சத்திரங்களை விட அது 10,000 மடங்கு பெரிதாக இருந்ததாகக் கூறப்பட்டது.

சிங்கப்பூரில் தமிழ்ஆராய்ச்சிபிரிவு

சிங்கப்பூர், ஏப். 27

சிங்கப்பூர் பல்கலைக்கழகம் தமிழ் ஆராய்ச்சிப் பிரிவை மீண்டும் ஆரம்பிக்கவிருப்பதாக அந்நாட்டுக் கல்விமந்திரி கூறினார்.

இந்தப் பிரிவு முன்பு 1956-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், மலேஸியா நிறுவப்பட்டவுடன் அது கோலாலம்பூருக்கு மாற்றப்பட்டது. இப்போது சிங்கப்பூர் மலேஸியாவிலிருந்து பிரிந்துவிட்டதால் புதிய பிரிவு ஒன்று அங்கு மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது.

சிங்கப்பூர் அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ள 4 மொழிகளில் தமிழும் ஒன்றாகும்.

டாஷ்கண்டில் இரண்டாம் தடவையும் பூமி அதிர்ச்சி

டாஷ்கண்ட், ஏப். 27

டாஷ்கண்டில் நேற்றுக் காலை பூகம்பம் ஏற்பட்டு 14 மணி நேரத்திற்குள் மீண்டும் மாலையில் இருமுறை நில அதிர்ச்சி கண்டதாக அறிவிக்கப்பட்டது.

நேற்றுக்காலை ஏற்பட்ட பூகம்பத்தில் ஆட்சேதம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதைவிட அதிகமாய் இருக்கும் எனக் கூறப்படுகிறது.

பழைய நகரிலுள்ள மண் சுவர்களாலான வீடுகளே பெருமளவு சேதமுற்றதாயும், புதிய கட்டிடங்களுக்குச் சேதம் இல்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

சாஸ்திரி—அயூப் சந்தித்து புகழ்பெற்ற டாஷ்கண்ட்ஒப்பந்தத்தை இயற்றிய அரசாங்கக் கட்டிடத்துக்கு சேதம் எதுவுமில்லை.

நகரத்தை சீர்திருத்துவது சம்பந்தமாக 4 பேரடங்கிய கமிஷன் ஒன்றை அரசாங்கம் நியமித்திருக்கிறது.

இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி காந்தி, ரஷ்யப் பிரதமர் கோஸிஜினுக்கு பூகம்ப சேதம்பற்றி அனுதாபம் தெரிவித்திருக்கிறார்.

வடகிழக்கு ரயில்வே

புதுடில்லி, ஏப். 27

வடகிழக்கு எல்லைப்புற ரயில்வேயிலும், நாகர் பகுதியிலும் நெடுகிலும் அஸ்ஸாம் பொலிசார் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். நேற்று முதல் அவர்கள் பிரயாணிகளின் மூட்டை முடிச்சுக்களைச் சோதனையிட ஆரம்பித்துள்ளார்கள்.

மாண்டவர் 35 பேர்

புதுடில்லி, ஏப். 27

அமராவதியில் பருத்தி விதைஎண்ணெய்த் தொழிற்சாலை வெடிவிபத்தின் காரணமாக இறந்தவர்களின் தொகை 35 ஐ எட்டியிருப்பதாகவும், காயமடைந்தமற்றும் 25 சிலரின் நிலைமையும் அபகரமாய் இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது. விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை.

பச்சை அரிசி கஷ்டம்!

அச்சுவேலி, புதன்

கடந்த பலமாதங்களாக இப்பகுதியிலுள்ள சங்கக் கடைகளில் கூப்பனுக்குப் பச்சை அரிசி இல்லாததால் கிராமமக்கள் பெரிதும் கஷ்டத்துக் குள்ளாகியிருக்கிறார்கள்

இதுகுறித்து பத்தைமேனி விநாயக சனசமூகநிலையத்தினர்காரியாதிகாரி திரு. நா. வேதாரணிய சேயோனுக்குப் புகார் செய்துள்ளனர்.

"பொலிஸாரை நண்பராக கருதவேண்டும்"

கழிபுரம், புதன்

"நாட்டின் வருங்கால பிரஜைகளான இளம் சிறுவர்கள் நல்ல திடகாத்திரமுள்ளவர்களாக வருவதற்கு விளையாட்டுப் போட்டிகள் மிகவும் அவசியமாகும். வடமாகாண மக்களுக்கு விளையாட்டு தந்தையாக இருந்தவர், முன்பு வடமாகாண பொலிஸ் அதிபராக இருந்த திரு. வான்டுவெஸ்ட் ஆவர். அவர் பொது மக்களையும் பொலிஸ் பகுதியினரையும் மிகவும் நெருங்கிப் பழக விளையாட்டுத்துறையைத் துணையாகக் கொண்டார்" என்று சங்கானை-நிகரை வாலிப மன்றத்தினரின் விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு.சி.டி. மெண்டிஸ் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கானை நிகரை வயிரவர் கோவில் முன்றலில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு சங்கானைப் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் தலைமைவகித்தார். திரு .சி.டி மெண்டிஸ் மேலும் பேசுகையில், எமது பகுதி மக்கள் அமைதியுடனும் ஒழுங்குடனும் வாழ நாம் எம்மாலான எப்பணியையும் எப்போதும் செய்ய தயாராக இருக்கவேண்டுமென்றும் பொதுமக்கள் பொலிஸ் பகுதியினரை தங்களுக்கு உதவி செய்யும் நண்பர்களாகவே கருத வேண்டுமென்றும் எதிரியாகக் கருதக்கூடாதென்றும் கூறினார். ஆசிரியர் திரு எஸ். இரத்தினசாமியும் உரை நிகழ்த்தினார்.

சங்கானை பட்டினசபை மூன்றாம் வட்டார அங்கத்தவர் திரு எஸ். கந்தசாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திரு. சி. டி. மெண்டிஸ் பரிசில்களை வழங்கினார். முடிவில் மூன்றுநாடகங்களும் நடைபெற்றன. போட்டிமுடிவின்படி மஞ்சள் இல்லம் 149 புள்ளிகளை எடுத்து முதலாவது இடத்தையும் பச்சை இல்லம்140 புள்ளிகளை எடுத்து இரண்டாவது இடத்தையும் பெற்றன.

முத்தமிழ்மன்ற கூட்டம்

பருத்தித்துறை, புதன்

தென்புலோலியூர் இளங்கோ முத்தமிழ் மன்றத்தின் கூட்டம் ஆசிரியர் எஸ் சிவபாத சுந்தரத்தின் தலைமையில் நடைபெற்றது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சமய வகுப்புகள் நடாத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது. கிராமசேவகர் எஸ் ஜெகநாதனும் உரை நிகழ்த்தினார். திரு. வி. சி மூர்த்தி நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ. 'பாட்மின்ரன்' போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ.யின் 3-வது வருடாந்த 'பாட்மின்ரன் போட்டிகள் வை. எம். ஸி. ஏ.யின் திறந்த வெளியரங்கில் அமையப்பெற்ற பட்மின்ரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன. அரை இறுதிக்கான போட்டியின் முடிவுகளும், அதற்கடுத்து இறுதி ஆட்டத்தின் முடிவுகளும் வருமாறு:-

அங்கத்தவர்களுக்கான ஒற்றையர் ஆட்டம்

அரை இறுதித் தேர்வுக்கான ஆட்டத்தில் எஸ். நிமலாநந்தா, என். பி. சேகரத்தைத் தோற்கடித்தார். புள்ளிகள் வருமாறு:- 12/15, 15/3, 15/4

அரை இறுதிக்கான தேர்வுப் போட்டியில் டி. எம். சோமசுந்தரம்—ஏ.டி. என். செல்வத்துரையை வெற்றி கண்டார். புள்ளிகள்:- 15/9 15/12

அரை இறுதிக்கான தேர்வுப் போட்டியில் அலெக்ஸ் தம்பிராசா—டாக்டர் ஆர். இராமலிங்கத்தை வெற்றி பெற்றார், புள்ளிகள்:- 15/1, 15/2.

வெளியார்களுக்கான ஒற்றையர் ஆட்டம்

அரை இறுதி ஆட்டத்தில் அலெக்ஸ் தம்பிராசா—என். சிவபாதத்தை தோற்கடித்தார். புள்ளிகள்:-15/8 15/1

அங்கத்தவர்களுக்கான இரட்டையர் ஆட்டம்

இதன் இறுதித் தேர்வுப் போட்டியில் அலெக்ஸ் தம்பிராசாவும்— டி. ஏ. சம்பியனும்—எஸ். ஜெயேந்திரன், சி. சிவேந்திரன் இருவர்களும் வெற்றிபெற்றார்கள். புள்ளிகள்:- 18/3, 14/17, 15/12.

வெளியார்களுக்கான இரட்டையர் ஆட்டம்

அரை இறுதிப் போட்டிக்கான தேர்வில் எஸ். ஜெயேந்திரன் & சிவேந்திரன்—அலெக்ஸ் தம்பிராசா & எஸ். நிமலாநந்தா ஆகியவர்களுக்கு வெற்றிபெற்றதாக அறிவித்தமையால் அவர்கள் இருவரும் இறுதிப் போட்டிக்கான தேர்வில் வெற்றிபெற்றார்கள்.

பெண்களுக்கான ஒற்றையர் ஆட்டம்

செல்வி யு. இரட்ணசிங்கம், செல்வி எஸ். சிவராசாவை வெற்றிபெற்றார். புள்ளிகள்:-21/7, 1/14.

மாணவிகளுக்கான ஒற்றையர் ஆட்டம்

இப்போட்டியில் செல்வி யு. இரட்ணசிங்கம், செல்வி ஆர். சபாரட்ணத்தை வெற்றிபெற்றார். புள்ளிகள் 9/11, 11/8, 11/1,

இறுதிப்போட்டி முடிவுகள்

அலெக்ஸ் தம்பிராசா—டி. எம். சோமசுந்தரத்தை வெற்றிபெற்றார். புள்ளிகள் 15/3, 15/9.

வெளியார்களுக்கான ஒற்றையர் ஆட்டத்தில்

அலெக்ஸ் தம்பிராசா—எஸ். நிமலானந்தாவைத் தோற்கடித்தார். புள்ளிகள்: 18/17 15/5.

அங்கத்தவர்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில்

அலெக்ஸ் தம்பிராசாவும் டி. ஏ சம்பியனும் சேர்ந்து எஸ் ஜெயேந்திரனையும் சி. சிவேந்திரனையும்தோற்கடித்தனர் புள்ளிகள்:- 18/3, 14/17, 15/12.

வெளியார்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில்

என் பி. சேகரமும் —சிவபாதமும் —அலெக்ஸ் தம்பிராசா & எஸ். நிமலாநந்தாவைத் தோற்கடித்தனர். புள்ளிகள்:- 15/9, 15/9.

கலப்பு இரட்டையர் ஆட்டத்தில்

என். பி. சேகரமும் திருமதி எச். எஸ். ஜே. பனம்பலானவும் சேர்ந்து அலெக்ஸ் தம்பிராசாவையும் அவருடன் சேர்ந்த செல்வி யு. இரட்னசிங்கத்தையும் வெற்றிபெற்றார்கள் புள்ளிகள்:- 15/9, 11/15, 11/15.

வெற்றிபெற்ற வீரகளுக்கு திருமதி வேர்ணன் அபயசேகரா பரிசில்களை வழங்கினார். பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா கலந்துகொண்டார்.

கத்தோலிக்கரின் மே தினம்

யாழ்ப்பாணம், வியா.

மே தினத்தை அர்ச். சூசையப்பர் தினமாக கத்தோலிக்க தொழிலாள உலகம் கொண்டாடுகிறது.

இதனையொட்டி வைகாசி முதலாம் திகதி காலை 8-30 மணிக்கு திவ்விய பூசையும் (யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியில்), காலை 3-30 மணிக்கு ஞான ஒடுக்கம் ஆரம்பம், பிற்பகல் 4-30 மணிக்கு ஞானஒடுக்கம் முடிவு (ஞான. ஒடுக்க பிரசங்கத்தை பிரபல பேச்சாளரான இந்திய குருவானவர் நிகழ்த்துவார்), 6-00 மணிக்கு தொழிலாளர் கீதம், 6-15 சொற்பொழிவு, 6-30 க்கு யாழ். மேற்றிராணியார் ஆண்டவர் திவ்விய பூசை ஒப்புக்கொடுக்கப்படும். திவ்விய பூசைக்கு முன்னர் மேற்றிராணியார் தொழிலாளர்களின் ஆயுத உபகரணங்கள் ஆசீர்வதிக்கப்படும்.

திருநாளுக்கு ஆயத்தமாக 28-ம், 29-ம், 30-ம் திகதிகளில் பிற்பகல் 6-30 மணிக்கு புனித செபஸ்தியார் ஆலயத்தில் திரிதனை ஆராதனைகள் நடைபெறும்.

ரயிலில் தீ! மூவர் பலி

கல்கத்தா, ஏப். 27

வங்காள கடுகதி புகையிரதத்தில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் மூவர் மாண்டதாக அறிவிக்கப்பட்டது.

கொழும்பு
வியாழன் 28 - 4 -66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-15 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 பாட்டு, 7-45 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் மன்றம், 5-45 பிரபல வாத்திய இசைகள், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 இசை வகுப்பு, 7-00 பேச்சு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பாட்டு, 10-30 ஒலிபரப்பு முடிவு.

சங்காபிஷேகமும் அன்னதானமும்

அச்சுவேலி, புதன்

ஊரெழு வீரகததி விநாயகர் ஆலயத்தில் அண்மையில் அட்டோத்தர சங்காபிஷேகம் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

சந்தனாபிஷேகம், அன்னாபிஷேகம் முதலியனவும் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்றிய இவ் அன்னதானம் ஊரெழு, கரந்தன் மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னதான மடம்

சுழிபுரம், புதன்

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவிலில் புதிய அன்னதானமடம் ஒன்றை பண்டத்தரிப்பு கிராம சபைத்தலைவர் திரு. எஸ். இராமலிங்கம் கமயாச்சார முறைப்படி திறந்து வைத்தார்.

பிரிவுபசார விழா

சுழிபுரம், புதன்

தொல்புரம் விக்கினேஸ்வரவித்தியாசாலை தலைமை ஆசிரியர் திரு. இ. பராராஜசிங்கம் தலைமையில் மேற்படி பாடசாலையில் இருந்து இடமாற்றம் செய்யப்பட்டுச் செல்லும் இரு ஆசிரியர் திருவாளர்கள் நா. முருகையா, வ. நல்லதம்பி ஆகியோருக்கு ஓர் பிரிவுபசார விருந்து நடாத்தப்பட்டது இருவர்களினதும் சேவையைப் பாராட்டி திருவாளர்கள் சி. சோமசுந்தரம், ஆ. சதாசிவம், பண்டிதை நா. பாக்கியம் ஆகியோர் பேசினர். திரு. நா. முருகையா, திரு. வ. நல்லதம்பி பாராட்டுக்கு நன்றி தெரிவித்து உரைநிகழ்த்தினர்.

இடதுசாரிகள் விடுதலை

புவனேஸ்வரம், ஏப், 27

ஒரிஸ்ஸாவில் சகல இடதுசாரி கம்யூனிஸ்டுகளும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இசை விழா

இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபாவின் 15வது ஆண்டு இசைவிழா ஏழாம்நாள்நிகழ்ச்சிகள்; 5-15 மேளம், 6-45 பாட்டு, 8-00 தலைமையுரை: திரு.லீல் குணசேகரா (கலைகலாச்சாரப்பகுதி)8-15 காயதரிசி அறிக்கை, 8-30 பாட்டு, 9-45பாட்டு.

மூளாய் சித்திவிநாயகர் உற்சவம்

சுழிபுரம், புதன்

மூளாய் சித்திவிநாயகர் ஆலய உற்சவம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து பதினொரு தினங்கள் அலங்கார த் திருவிழா நடைபெற்று தேர்த்திருவிழாவும் நடைபெறும். தினமும், கூட்டுப் பிராத்தனை சமயச் சொற்பொழிகளும் நடைபெற்று வருகின்றன.

அன்பின் இன்பக் கனி

அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி,
ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும்
வளர்வதைக்கண்டு மகிழ்ச்சியடைவார்கள்.



ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாறாத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும் விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் அருந்தும்
குழந்தைகள் பெலனுன சுக வளர்ச்சி பெறுகிறார்கள்.

ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ—அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு

ஒஸ்டர்மில்க் குழந்தைப் புத்தகம் ஒன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள
கீழ்கண்ட விலாசத்திற்கு 10 சத முத்திரை அனுப்பவும்
பகுதி 25, கிளக்ஸோ அலன்பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு

173/66

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(F) பாம் பிருன்ட் கட்டிப்பால் விலைப் பட்டியல்

எங்கள் (F) பாம் பிருன்ட் இனிமையான கட்டிப்பால் ஒரு கப்பலில் அண்மையில் வந்துள்ளதென்பதை பாவனையாளர்களுக்கு அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம் பொதுமக்களின் நன்மைகருதி நாங்கள் கீழே விற்பனைவிலையையும் சில்லறை விற்பனை விலையையும் தருகின்றோம்

மொத்த விற்பனை விலை ரூபா 41 ஒரு பெட்டி 48×14 அவுன்ஸ்

சில்லறை விலை 90 சதம் ஒரு டின்

ஒறியன்ற் கம்பனி (இலங்கை) லிமிட்டட்

பிரிட்டிஷ் சிலோன் கோப்பரேஷன் லிமிட்டட்டின் கிளை

நல்ல காலம் வருகுது! நல்ல காலம் வருகுது!

உங்கள் வீடு தேடிவரும் சன்லைட் மங்கையிடம்

10/- ரூபாய்

பரிசு பெறுங்கள்!

இலகுவாக நீங்கள் 10/- ரூபாய் பரிசு பெற இதோ ஒரு சந்தர்ப்பம்!

மேலே படத்தில் காணப்படுபவர் போன்ற ஒரு சன்லைட் மங்கை, ஏப்ரல் 28ம் தேதிக்கும் 30ம் தேதிக்கும் இடையில் நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு விஜயம் செய்வார். அவர் விஜயம் செய்யும் வீடு தோறும், உங்கள் தகுதியை ஆராய்ந்து பத்து ரூபாய் வீதம் பரிசுகளை வழங்குவார்.

பத்து ரூபாய் பரிசுக்குத் தகுதி பெற நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான்:

உங்கள் வீட்டில் இரண்டு கட்டி சன்லைட் வைத்திருங்கள். ஒன்று பாவனையிலும் ஒன்று புதிதாகவும் இருக்க வேண்டும். இரண்டுகட்டிகளையும் சன்லைட் மங்கையிடம் காட்டுங்கள். "நீங்கள் ஏன் சன்லைட் உபயோகிக்கிறீர்கள்?" என்று அவர் கேட்பார்.

"சன்லைட் தருவது மேலும் பிரகாச சலவை; அத்துடன் சன்லைட்டினால் ஒரு உடையைச் சலவை செய்யும் செலவு, ஒரு சதத்திலும் குறைவு" என்று சரியாயாகப் பதில் கூறுங்கள். இந்தச்சரியான விடையைக் கூறினால் உடனே அவர் உங்களுக்கு 10/- ரூபாய் பரிசு கொடுப்பார்

இந்தப் பரிசுத் திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் செல்லுபடியாகும்.

உங்கள் சலவை வேலைகள் அனைத்தையும், வீட்டில் சன்லைட்டினால் செய்து, சுத்தமான பிரகாசமான ஆடைகளை அணியுங்கள். கொடுக்கும் பணத்துக்குத் தகுந்த சிறந்த பெறுமதி தருவது சன்லைட்.

சன்லைட் மேலும் பிரகாசமாகச் சலவை செய்கிறது- வேறெந்த சோப்பும் நிகர் நிற்க முடியாத பிரகாசம்.



JWT/S/4x56 (P)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. A. முத்தையா அவர்கள்

பரமபதமடைந்த

1-ம் வருட ஞாபகம்

தோற்றம்: 25-3-1893

மறைவு: 28-4-1965

இவரின் பிரிவால் துய்ருறும் பாரியார்
M. பாக்கியம்
புதுரோட்
கொய்யாத்தோட்டம். 172

தேவை

வலிகாமம் மேற்கு ஐக்கிய பால் பண்ணைச் சங்கம்

பால் பரிசோதனை செய்வதற்கு ஒரு தேர்ச்சி பெறப்பட்ட ஒரு பரிசோதகர் (Analysist) தேவை.

தராதரம்:
(1) வயது 25 க்கும் 40 க்கும் உட்பட்டவராகவும்.
(2) கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தில் பிரதானமாக இரசாயனப் பாடத்தில் (Chemistary) சித்தியடைந்தவராகவும் இருக்கவேண்டும்.

சம்பள விகிதம்:
சகல வாழ்க்கைப்படியும் உட்பட 125—255
5X6 & 10X10

விண்ணப்ப முடிவுத் திகதி 15-5-66.

க. நாகலிங்கம்,
கௌரவ காரியதரிசி.
வழக்கம்பரை
சுழிபுரம். 171

நியமனம்

துணுக்காய், புதன் துணுக்காய்ப் பிரிவைச் சேர்ந்த வன்னேரிக்குளம், யோகபுரம், உயிலங்குளம் ஆகிய பகுதிகளுக்கு முறையே முன்னர் கிராமாதிகாரிகளாகப் பல வருடங்களாகக் கடமையாற்றிய திரு. செ. உலகநாதன் (பலாலி முன்னாள் கிராமாதிகாரி) திரு. நடராசா (நெடுந்தீவுமத்தி இளைப்பாறிய கிராமாதிகாரி) திரு. சு. இரத்தினசபாபதி (அனலைதீவு முன்னாள் கிராமாதிகாரி) ஆகியவர்கள் 1-4-66-ம் திகதி தொடக்கம் கிராமசேவையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரிவுபசாரவிழா

துணுக்காய், புதன் துணுக்காய்ப் பிரிவில் உள்ள வன்னேரிக்குளம் எனுமிடத்தில் கிராமசேவையாளராகக் கடமையாற்றி வண்ணார்பண்ணை மேற்கிற்குக் கிராமசேவையாளராக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் திரு. பெ. எ. யூலியஸுக்கும் துணுக்காய் காரியாதிகரி காரியாலயத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கச்சேரிக்கு சமூகசேவைப் பகுதிக்கு இடமாற்றப்பட்டிருக்கும் திரு. ஜே. தர்மரத்தினத்திற்கும் துணுக்காய் பகுதிக் காரியாதிகாரி கலைமையில் பிரிவுபசாரவிழா நடைபெற்றது.

வீதியின் 'அழகு'!

சுழிபுரம் புதன் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு முன்பு உள்ள வீதி போக்குவரத்து செய்யமுடியாத அவலநிலையில் இருந்து வருகின்றது நான்கு பக்கமும் தண்ணீர் தேங்கி நிற்கின்றது! பாதையின் நடுவில் பெரிய பெரிய கிடங்குகள் காணப்படுகின்றன! மழை பெய்தால் அப்படியே மழைநீர் நிற்கின்றது கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழைநீர் அவ்விடத்திலேயே ஓர் குளம்போல் இருப்பதைக் காணக்கூடிய

வரிவிளம்பரம்

தேவை

மில்லில் அனுபவமுள்ள 18 வயதிற்குட்பட்டபையன் தேவை நேரில் வரவும். பி. எம். பிள்ளை, மனோன்மணி மில், பிறவுன் ரோட், 4-ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 278

விற்பனைக்கு

'நெல்லியடி இண்டஸ்றியல் வேக்ஸ்' ஸ்தாபனத்தில் 22 K. V. டைனமோ பொருத்தப்பட்ட 31 H. P. லிஸ்டர் புத்தம்புதிய எஞ்சின் விற்பனைக்குண்டு. (சுவிச் போர்ட்டும் பொருத்தப்பட்டுள்ளது). விபரங்கட்கு:- 'இண்டஸ்றியல் வேக்ஸ்', நெல்லியடி, கரவெட்டி. 271

CL சீரிஸ்மொரிஸ்மைனர் மிகவும் நல்ல நிலையில்சொந்தப் பாவிப்பிலுள்ளகார்விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். முகவரி- 18, பிறவுன் ரோட், யாழ்ப்பாணம், 273

வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

தற்கொலை

யாழ்ப்பாணம், வியா. உடுவில் சுண்ணாகத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

யாழ். மரணவிசாரணஅதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணைநடத்தினார்.

காலஞ்சென்றவரின் தந்தை விஞசித்தம்பி சாட்சியமளிக்கையில், 11 வருடமாக தனது மனைவியுடன் பிரிந்திருந்து தம்முடனேயே வசித்துவந்தாரென்றும், சம்பவம் நடந்ததினம் மதுவெறியுடன் வீட்டுக்கு வந்தாரென்றும், தான் அவருடன் சற்றுப்பேச்சுப்படவே, எனக்குப் புத்தி கற்பிப்பதாகச் சொல்லிவிட்டுப் போனவர் இறந்து காணப்பட்டாரென்றும் கூறினார்,

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மந்திரியிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், வியா. வட இலங்கைப் பிரத்தியேக ஆஸ்பத்திரி தொழிலாளர் சிங்கப் பிரதிநிதிகள் பிரத்தியேக ஆஸ்பத்திரி தொழிலாளருடைய குறைபாடுகளை தொழில் வீடமைப்பு அமைச்சர் திரு. எம். எச். முகமத்திடம்முறையிட்டுள்ளார்கள்.

ஆஸ்பத்திரி ஊழியர்கள் அனுபவித்துவரும் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்காக ஒரு சம்பள நிர்ணய சபையை அமைக்கும்படியும் தங்கள் பிரச்னைகளை விரைவில் தீர்த்து கைக்கும்படியும் மந்திரியைக் கேட்டுள்ளார்கள். விரைவில் தகுந்த நடவடிக்கைகளை மந்திரி மேற்கொள்வதாக வாக்குறுதி அளித்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் ஈ. சாமுவேல், த. பாலசிங்கம், த. அரியகுணராசா ஆகியோர் மந்திரியைச் சந்தித்த குழுவில் அங்கம்வகித்தனர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

சனி கும்பத்திலா அல்லது மீனத்திலா?

காரைநகர் சி. சு. தேசிகர் எழுதுவதாவது:-

"வாக்கிய பஞ்சாங்கப்படி சனி கும்பத்திலும், திருக்கணித பஞ்சாங்கப்படி சனி மீனத்திலும் இருக்கின்றது. சனி கும்பத்திலிருக்கின்றதா அல்லது மீனத்திலிருக்கின்றதா என்பதைச் சாதாரணமாகப் பார்த்தறியத்தக்க வசதிகளில்லை.

கும்பகோணம் சங்கராசாரிய சுவாமிகள் மடத்துப் பஞ்சாங்ககாரர், இந்த மாதம் 19-ந் திகதி (2-5-66) திங்கட்கிழமை அதிகாலை விடியுமுன் சுக்கிரனுக்குத் தெற்கே 1 பாகையில் சனி காணப்படுமெனச் சனி சுக்கிர சமாகமம் குறித்திருக்கின்றனர். இதுபற்றிமட்டுவில் திருக்கணித பஞ்சாங்ககாரரை வினவியதில், தாமும் அச்சமாக மத்தைக் கணித்துள்ளதாகவும் தம் பஞ்சாங்கத்தில் சமாகமப் பகுதியில் இடமின்மையால் விடுபட்டு விட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

சுக்கிரன் இந்தச் சித்திரை மாதத்தில் 16-ந் திகதி மீனத்திற் பிரவேசிப்பதாக இருவகைப் பஞ்சாங்ககாரரும் குறித்துள்ளனர். ஆகவே மீனத்தில் பூரட்டாதி 4-ம் பாதத்தில் கடைக் கூற்றிலிருக்கும் சுக்கிரனுக்குத் தெற்கே, வாக்கியப்படி கும்பத்தில் பூரட்டாதி 2-ம் பாதத்திலிருக்கும் சனி 1 பாகையில் சமாகம மாவதெப்படி யென்பதும், சனியும் பூரட்டாதி 4-ம் பாதத்தில் கடைக்கூற்றில் இருந்தால் மட்டுமே அது சமாகமமாக முடியும் என்பதும் ஒரு பிரச்சினை. வாக்கியப்படி சனி சுக்கிரனுக்கு மேற்கே ஆறு ஏழு பாகை தூரத்தில் இருக்க வேண்டும். இச்சமாகமம் நிகழுமானால், சனி மீனத்திலென்றே துணியவேண்டியதாகும்.

டாக்டர்கள் கோஷ்டி இனிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்

வடமாகாண டாக்டர்கள் கிரிக்கெட் கோஷ்டிக்கும் வழக்கறிஞர்கள் கிரிக்கெட் கோஷ்டிக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சிநேகிதபூர்வமான கிரிக்கெட் போட்டியில் டாக்டர்கள் கோஷ்டி ஒரு இன்னிங்சினால் அமோகமாக வெற்றியீட்டினர். முதல் இன்னிங்சில் டாக்டர் கோஷ்டி 5 விக்கட்டுகளை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை முடித்தனர். வழக்கறிஞர்கோஷ்டி முதல் இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 87 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் 107 ஓட்டங்களையும் பெற்றனர்.

தமிழ் பகுதி நிறுவ கோரிக்கை

யாழ்ப்பாணம். வியா.

கதிரவேற்பிள்ளை கலாமன்றத்தினர் அண்மையில்கூடிய பொழுது கீழ்க்கண்டதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

"ஈழத்து தமிழ்பேசும் மக்களுக்கு மிக இன்றியமையாத தேவையாக இருக்கின்ற ஒரு முழுமையான பல்கலைக் கழகத்தைத் தமிழ்பேசும் மக்களின் மத்திய இடமான திருமலையில் நிறுவுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி இம்மன்றம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது".

"ஈழத்து மத்திய வங்கியில் தமிழ் மொழிபெயர்ப்புகளைக் கவனிக்கத் தகுதி வாய்ந்த ஒரு தமிழ்மொழி பெயர்ப்பாளரை நியமித்துத் தக்க பரிகாரம் செய்யுமாறு இக்கலாமன்றம் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது."

"தமிழ்மொழி சிறப்பு ஏற்பாட்டுச் சட்டத்தின் விதிகளைச் செயற்படுத்தும் பொருட்டு, ஒரு தமிழ்த்துணை ஆணையாளரின்கீழ் ஒரு தனியான தமிழ்ப் பிரிவினை தமிழ்பேசும் மக்களின் நன்மைகருதி அமைத்துத் தரும்படி அரசாங்கத்தை இம்மன்றம் தயவாய்க் கேட்டுக்கொள்கிறது."

வருமானவரி இலாகா அதிபர்

யாழ்ப்பாணம், வியாழன்

வருமானவரி இலாகா அதிபர் திரு. எஸ். சிற்றம்பலம் உத்தியோகப்பூர்வமான முறையில் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள வருமானவரி இலாகாவிற்கு சென்று பல நிர்வாகமுறை சம்பந்தமான விஷயங்கள் பற்றி ஆராய்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையுடன் இணைய நல்லூர் கி.ச. ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வியா.

மார்ட்டின் தனிநபர் கமிஷன் அறிக்கையின்படி, நல்லூர் கிராமசபை யாழ். மாநகரசபையுடன் இணைக்கப்படுவதை நல்லூர் கிராமசபை ஆட்சேபித்துள்ளது.

பிரதமமந்திரிக்கும், ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கும் தமது ஆட்சேப மகஜரைக் கிராமசபை அனுப்பிவைத்துள்ளது. இதன் பிரதிகள் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

நல்லூர் கிராமசபை யாழ். மாநகரபையுடன் சேராது தனித்து இயங்குவதையே விரும்புகிறதென்றும் கிராமசபை தனது நிர்வாகத்தை நடத்துவதற்காக அரசினரின் கட்டளைகளை அனுசரித்து விதிக்கப்பட்ட வரிகளே பொது மக்களுக்குப் பெரும் கஷ்டமாகவுள்ளதென்றும், வரிச்சலுகைகள் அளிக்கப்படவேண்டும் என்றும், ஏற்கெனவே கிராமச்சபையால் விதிக்கப்பட்ட வரிகள் பொது மக்களிடமிருந்து அறவிடப்படாமல் பாக்கியாக இருக்கின்றதென்றும் முன்னேற்றமான, வருமானம் கூடிய நல்லூர் கிராமசபையின் பகுதிகளை மாநகரசபையுடன் இணைத்துக் கொண்டு பின்தங்கிய பகுதிகளை தள்ளிவிடுவது பெரும் அநீதியென்றும் தெரிவித்துள்ளது. இதுசம்பந்தமாகப் பிரதமமந்திரியுடன் பேச்சுவார்த்தை நடாத்தவிருப்பதாகவும் தெரிகிறது.

நிலைமை இவ்வாறிருக்க, மார்ட்டினை யாழ் மாநகரசபை எல்லை நிர்ணயக் கமிஷனில் நில அளவைப்படம் வரையும் அதிகாரிகளாகக் கடமையாற்றிய சிலரை மே மாதம் முற்பகுதியில் இருந்து யாழ்ப்பாண நகரப் பகுதியில் கடமையாற்றும்படியும், மார்ட்டின்கமிஷன் சமர்ப்பித்த புறவுருவப் படங்களை சனத்தொகை, இடவிஸ்தீரணம், வட்டாரங்களின் அமைப்பு, சூழல் என்பனபற்றிய முழுவிபரங்களைத் தயாரிக்கும்படியும் உள்ளூராட்சி அமைச்சினால் உத்தரவிடப் பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

அரசாங்க தேர்தல்பகுதி உள்ளூராட்சி ஆணையாளர் பகுதி, மராமத்துப்பகுதி, புள்ளிவிபர இலாகா என்பன சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு வேண்டிய தகவல்களைக் கொடுத்துவ வேண்டுமென்றும் உள்ளூராட்சி அமைச்சினால் உத்தரவிடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. (ந. நி.)

பாப்பரசர் குரோமிக்கோ சந்திப்பு

வத்திக்கான், ஏப். 27

பாப்பாண்டவர் போல், இங்கு வந்துள்ள சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிக்கோவை வரவேற்றுப்பேசினார். பாப்பரசரும் திரு. குரோமிக்கோவும் சுமார் 40 நிமிடநேரம் பேசினார்கள். கம்யூனிஸ்ட் பெரும் தலைவர் ஒருவர் பாப்பாண்டவரை சந்தித்துப் பேசுவது இதுவே முதல் தடவை.

யாழ்ப்பாண மக்களே!

வாருங்கள் வந்து கேளுங்கள்

வண. லொயிட் பெரேரா

அளிக்கும்

தெய்வீக விடுதலை தூது

ஏப்ரல் 28 — மே 4 வரை

தினமும் மாலை 6-00மணிக்கு நடைபெறும்.

இடம்: தேவசபை மண்டபம் (Assembly of God)

இராசாவின் தோட்டம் ரோட், யாழ்ப்பாணம்.

எல்லோரையும் அன்பாக அழைக்கின்றோம்

சிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30.

போயா நாட்களில் 4 காட்சிகள்.

விஜயா (மலைடக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)

மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)



சிவாஜி கணேசன் - சாவித்திரி

(9 மாறுபட்ட வேடங்களில்)

நாகேஷ் —— மனோரமா

மற்றும் பலர் நடித்திருக்கும்

நவராத்திரி

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 67-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

REGAL—JAFFNA

NOW SHOWING!

James Robertson Justice

in

Mystery Submarine

(Naval War Film)

நியூ காலிங்கன் (இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறை தினங்களில் 2-30 மணி

எம். ஜி. ஆர். - பத்மினி

நடித்த

ராணி சம்யுக்தா

ராஜா (யாழ்ப்பாணம்)

2-30, 6-30, 9-45க்கு மட்டும்

எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி

நடித்த

சிவாஜிகாவி

[illegible]

பிரபல தென் இந்திய சினிமா நட்சத்திரங்கள்

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். இராஜேந்திரன்

இலட்சிய நடிகை

ஆர். விஜயகுமாரி

குழுவினரின்

"கண்ணகி கதை"

வில்லுப்பாட்டு நிகழ்ச்சி

யாழ்ப்பாண முஸ்லீம் கலாச்சார இலக்கிய சங்க நிதிக்காக

30-4-66

சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு

யாழ் நகர மேயர்

திரு. அல்பிரட் T. துரையப்பா

அவர்கள் தலைமையில்

யாழ்ப்பாண ஸ்டேடியத்தில்

நடைபெறும்.

டிக்கட் ரூபா 15-00, 10-00, 5-00, 3-00

டிக்கட் கிடைக்குமிடங்கள்

1 பான்சி பலஸ், பெரியதெரு, யாழ்ப்பாணம்
2 ஏ. கே. எஸ். & சன்ஸ், கன்னாதிட்டி ,,
3 சுபாஸ் கபே, ஆஸ்பத்திரி வீதி ,,
4 ராஜ்கோபால்ஸ், பெரியகடை ,,
5 சாறி எம்போறியம், கே. கே. எஸ். வீதி ,,
6 மலேயா றேடியோ சர்வீஸ், கஸ்தூரியார் வீதி ,,
7 S. சின்னத்துரைபிறதர்ஸ், கே.கே.எஸ்.வீதி ,,
8 யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் 420 ஆஸ்பத்திரி வீதி ,,
9 றஸீன் பிறதர்ஸ், கே. கே. எஸ். வீதி ,,
10 ரூட்டறி பிறின்ரிங் ரேட்ஸ், மானிப்பாய் வீதி ,,

இலட்சிய நடிகர்களின் யாழ்ப்பாண விஜயம் இதுவே முதல்தடவை. அவர்களின் வெண்கலஓசை, பண்புப் பேச்சைக் கேட்க அரும்பெரும் சந்தர்ப்பம். இழந்துவிடாதீர்கள்!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org